# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.313/2018

# CNR.No.TNCB19000

Date:16.12.2024 DW2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பார்க்கவ ராஜா | **வயது** | 63 |
| த/பெ | பழனிமலை | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | மேட்டுப்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 16th December 2024.

பி.வா..சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முன்னாள் ராணுவ வீரர். நான் முதல் விசாரணையில் சொன்ன முகவரியில் கடந்த 8 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு சிறுமுகையில் 15 வருடங்களாக குடியிருந்து வந்தேன். அதற்கு முன்பு ராணுவத்தில் பணிபுரிந்தேன். முதல் விசாரணையில் சொல்லி உள்ள முகவரிக்கு வந்த பின்னர் தான் தாவா சொத்துக்களை பற்றி தெரியும் என்றால் அதற்கு முன்பாகவே தெரியும். வாதிகளின் வீடு தாவா சொத்தின் எந்த திசையில் உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. தாவா சொத்துக்கு எந்த திசையில் பிரதிவாதிகளின் இடம் உள்ளது என்றால் ரோட்டிற்கு கிழக்கே உள்ளது. வாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு தூரத்து உறவுமுறை.

மோகன்தாஸ் கேட்டுக்கொண்டதன்பேரில்தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். புறம்போக்கு நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புறம்போக்கு நிலத்தில் யார் யார் எவ்வளவு ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி மோகன்தாஸ்க்கு தாவா சொத்து எப்படி வந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் 4 ம் பிரதிவாதி எந்தெந்த ஆண்டிற்கு எவ்வளவு அபராதம் செலுத்தினார் என்ற விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொல்லி உள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. மோகன்தாஸ் சொல்லி தெரியும்.

தாவா சொத்தில் யார் வீடு கட்டியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. மோகன்தாஸ்க்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்ததக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.